தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 54/பேரூ/2022

நாள் 23.06.2022

திரு. N.S.V.P.V நடராஜன்,
திருப்புவனம், சிவகங்கை மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருப்புவனம் பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம் ... எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், திருப்புவனம் பேரூராட்சியின் முன்னாள் துணைத் தலைவர் திரு. N.S.V.P.V நடராஜன் என்பவரது 02.05.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.05.2022ல் பெறப்பட்டு, 54/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், திருப்புவனம் பேரூராட்சியின் முன்னாள் துணைத் தலைவர் திரு. N.S.V.P.V நடராஜன் தமது 02.05.2022 நாளிட்ட புகார் மனுவில் திருப்புவனம் பேரூராட்சியில் சோலார் விளக்குகள் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டு, எந்தவொரு சட்ட விதிகளும் முறையாக பின்பற்றப்படாமல், முறையான டெண்டர் அறிவிப்பு ஏதும் இல்லாமல், தன்னிச்சையாக SRS என்ற தனியார் நிறுவனத்திற்கு டெண்டர் ஒதுக்கப்பட்டதாகவும், ஒரு சோலார் விளக்கிற்கு ரூ.1,50,000/– என 50 சோலார் விளக்கிற்கு ரூ.75.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், உண்மையில் ஒரு சோலார் விளக்கு அமைக்க ரூ.60,000/– வீதம் 50 சோலார் விளக்குகள் அமைக்க ரூ.30.00 லட்சம் வரைதான் செலவாகுமென்றும், மேற்படி முறைகேடுகள் குறித்து சென்னை உயர்நீதிமன்ற

மதுரைக் கிளையில் W.P.(MD) No.15766 of 2020 என்ற வழக்கு தம்மால் தாக்கல் செய்யப்பட்டு, செயல் அலுவலர், திருப்புவனம் பேரூராட்சியின் கடிதத்தில் **19.3.2020** அன்றைய தினமணி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, **27.3.2020**ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, முறையாக ராஜலெட்சுமி ஏஜென்ஸி, மதுரை என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டதாகவும், சூரிய மின்விளக்கு அமைக்க ரூ.**50,000/–** ஆனது ஒருபுறம் மட்டும் ஒளிரக்கூடியது என்றும், தற்போது அமைக்கப்படும் சூரிய ஒளி மின்விளக்கானது இருபுறமும் ஒளிரக்கூடியது என்று அளித்த தவறான அறிக்கையின் அடிப்படையில், மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் உயர்நீதிமன்றத்தில் தவறான தகவலை கொடுத்துள்ளார் என்றும், ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் டெண்டர் விடும் அதிகாரம் செயல் அலுவலருக்குக் கிடையாது என்றும், அதிக அளவு தொகைக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது தனியாக டெண்டர் விடவேண்டும். ஆனால் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து அதன் அடிப்படையில் டெண்டர் நடத்தியுள்ளார். மேலும், செயல் அலுவலரின் தவறான அறிக்கையின்பேரில் வழக்கு ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட்டதால், மேற்படி வழக்கினை "Recall" செய்யக்கோரி இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாக மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார். எனவே தனது புகார் மனுவினை சட்டத்தின்பாலும், இயற்கை நீதியின்பாலும் உரிய முறையில் பரிசீலனை செய்து திருப்புவனம் பேரூராட்சியில் சோலார் விளக்குகள் அமைக்க தனியாக முறையான டெண்டர் அறிவிப்பு இல்லாமல் சட்ட விதிகளை பின்பற்றாமல் தன்னிச்சையாக அதிக விலைக்கு தனியார் நிறுவனத்திடம் கொடுத்தது தொடர்பான முறைகேடு குறித்தும், இதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நிதியிழப்புக்குக் காரணமான செயல் அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க விசாரணை மேற்கொண்டு ஆணையிடுமாறும் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்

**2.** திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர் **31.05.2022** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ **26.05.2022** நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. மனுதாரர் மற்றும் திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் **31.5.2022** அன்றைய இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

மனுதாரர் திரு. V. நடராஜன் அளித்துள்ள வாக்குமூலத்தில் "சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சியில் சோலார் விளக்குகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்ட நிலையில், எந்தவொரு சட்ட விதிகளையும் முறையாக பின்பற்றாமல், முறையான டெண்டர் அறிவிப்பு இல்லாமல் தன்னிச்சையாக செயல்பட்டு, எஸ்.ஆர்.எஸ் என்கின்ற தனியார் நிறுவனத்திற்கு முறைகேடான டெண்டர் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு புகார் மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தபோது (W.P.No.15766/2020) நீதிமன்றத்தில் பேரூராட்சியால் தவறான தகவல் தெரிவிக்கப்பட்டதால், மேற்கண்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இது தொடர்பாக

மீண்டும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும், இந்நேர்வு தொடர்பாக எனது 2.5.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையே எனது மேல் வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா.கா. ஜெயராஜ் மற்றும் அப்பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. தொ. நாகராஜ் ஆகியோர் அளித்துள்ள வாக்குமூலத்தில் "சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சிப் பகுதியில் மின்கம்பங்கள் இல்லாமலிருந்து 50 இடங்களில் புதிதாக சூரிய மின் விளக்குகள் (Solar Lights) அமைத்திடும்பொருட்டு, திருப்புவனம் பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. மேலும், பத்திரிகையில் விளம்பரம் செய்தும், அறிவிப்புப் பலகையில் இதுகுறித்து அறிவிப்பும் வெளியிடப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக 2 ஒப்பந்தப்புள்ளி ஷெட்யூல் மட்டுமே பெறப்பட்டநிலையில், குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்திருந்த ரரஜலெட்சுமி ஏஜென்ஸீஸ் என்கின்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கான மதிப்பீட்டுத் தொகையை மூன்றாக பிரித்து போடுவதற்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டது என்கின்ற விவரத்தையும், இந்நேர்வு தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தணிக்கை பத்திகளில் எவ்வித ஆட்சேபனையோ அல்லது குறிப்பினையோ தெரிவிக்கவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு எஸ்.ஆர்.எஸ் என்கின்ற நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை. மாறாக, மேற்கண்ட ராஜலெட்சுமி ஏஜென்சீஸ் என்கின்ற நிறுவனத்திற்குத்தான் வழங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். இந்நேர்வு தொடர்பாக மனுதாரரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு (W.P (MD) No.15766/2020) தொடரப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டது என்கின்ற விவரத்தையும், மேலும் இந்நேர்வு தொடர்பாக மனுதாரர் மீண்டும் நீதிமன்றத்தை அணுகியுள்ள விவரம் எங்களுக்குத் தெரியாது என்கின்ற விவரத்தையும், மேலும் நீதிமன்றத்தின் மூலம் பேரூராட்சியால் எவ்வித அறிவிப்பும் பெறப்படவில்லை என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலரான எனது 31.5.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையே எங்களது மேல்வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

4. திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 31.5.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் திருப்புவனம் பேரூராட்சி பகுதிகளில் தேவையான

அனைத்து வகையான தெரு மின் விளக்குகள் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்வதற்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு, "தினமணி" நாளிதழில் **19.3.2020** அன்று விளம்பரம் செய்யப்பட்டு **27.3.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மதுரையைச் சேர்ந்த திருவாளர்கள் ராஜலெட்சுமி ஏஜென்சீஸ் என்ற நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்ததால், **2020–2021**ஆம் ஆண்டிற்கான மின் விளக்கு மற்றும் உதிரி பாகங்கள் மற்றும் சோலார் விளக்கு சப்ளை செய்வதற்கு ராஜலெட்சுமி ஏஜென்சீஸ், மதுரை நிறுவனத்திற்கு பேரூராட்சி மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் மின் கம்பங்கள் இல்லாத **50** இடங்களில் புதிதாக சூரிய மின் விளக்குகள் அமைக்குமாறு பரிந்துரைத்ததன்பேரில் சூரிய மின் விளக்குகள் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, **2020–2021**ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிறுவனமான ராஜலெட்சுமி ஏஜென்சீஸ் நிறுவனத்திற்கு **2 x 30** வாட்ஸ் கொண்ட **50** எண்ணிக்கை சோலார் விளக்கு அமைத்திட பணி உத்தரவு வழங்கப்பட்டது.

திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சியில் தன்னிச்சையாக SRS நிறுவனத்திற்கு ஒரு சோலார் விளக்கு சுமார் **ரூ.1,50,000/–** வீதம் **50** விளக்குகள் அமைக்க **ரூ.75,00,000/–** செலவாகுமெனவும், உண்மையில் ஒரு சோலார் விளக்குக்கு **ரூ.50,000/–**லிருந்து **ரூ.60,000/–** வரைதான் செலவாகும் எனவும் தெரிவித்து மனுதாரரால் கடந்த **22.10.2020**ம் தேதி மனு வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கும் தொடரப்பட்டது. அவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள SRS நிறுவனத்திற்கு பேரூராட்சியிலிருந்து எந்தவொரு பணி உத்தரவும் வழங்கப்படவில்லை. தனியரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சூரிய ஒளி மின்விளக்கு முறையான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் மீது மன்ற ஒப்புதல் பெற்று ராஜலெட்சுமி ஏஜென்சீஸ் மூலம் **50** இடங்களில் சூரிய மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதுடன், **50** இடங்களிலும் **2 x 30 watts and 48 hours package – all in one solar light with five metre pole** நடப்பட்டு, நல்ல முறையில் ஒளிர்ந்து வருகிறது. மேலும் மேற்படி நிறுவனம் இரண்டு ஆண்டுகளுக்கு முழு உத்தரவாதமும் மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு இலவச சேவையும் செய்து தருவதாக உத்தரவாதமும் அளித்துள்ளது. வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தொகை **ரூ.60,000/–**க்கு உள்ள ஒரு சோலார் விளக்கிற்கும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதன்படி பொருத்தப்பட்டுள்ள விளக்கிற்கும் சம்மந்தமில்லாமல் இருந்ததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னரே மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார். எனவே, மனுதாரர் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சோலார் மின் விளக்கிற்கும், ஒப்பந்தப்புள்ளியின்படி முடிக்கப்பட்டுள்ள சோலார் மின் விளக்கிற்கும் தொகை வேறுபாடு உள்ளது. இப்பணியில் முறைகேடு ஏதும் நடைபெறவில்லை என்ற விவரத்தை திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதுடன், உரிய ஆவணங்களின் நகல்களையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு தமது அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளார்.

**5.** மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், வாக்குமூலத்துடன் கூடுதலாக வழங்கப்பட்ட ஆவணங்கள், திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி செயல்

அலுவலரது வாக்குமூலம், விளக்க அறிக்கை மற்றும் ஆவண நகல்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.247/2020/அ1 நாள் 12.03.2020ல் 2020–2021ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட பொருட்களை சப்ளை செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால், **27.3.2020**ம் தேதி மாலை **3.00** மணிக்கு அந்த நேரத்தில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும் என்றும், ஒப்பந்தப்புள்ளிகள் சம்பந்தமாக நகராட்சிகள் நடைமுறை நூலில் கண்டுள்ள விதிகள் மற்றும் பேரூராட்சி அலுவலகத்தில் நடைமுறையில் உள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்துமென குறிப்பிடப்பட்டுள்ளது:-

| வரிசை எண் | பணி விவரம் | டேவணித் தொகை |
|---|---|---|
| 1. | திருப்புவனம் பேரூராட்சிப் பகுதியில் குடிநீர் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் மின் மோட்டார்கள், பம்புகள், பேனல்போர்டுகள் மற்றும் ரீவைண்டிங் பழுது நீக்கம் செய்தல், மோட்டார் மற்றும் பம்புகள் பொருத்துதல் (தனித்தனியாக விலை குறிப்பிடவேண்டும்) | ரூ.2,000/– |
| 2. | திருப்புவனம் பேரூராட்சிப் பகுதியில் குடிநீர் பைப்லைன் கசிவுகள் (உடைப்புகள்) சீர்செய்தல், அடிபம்புகளை பழுதுநீக்கம் செய்தல், பைப் வேலை செய்தல் மற்றும் கம்ப்ரசர் ஊதி சுத்தம் செய்தல் (தனித்தனியாக விலை குறிப்பிடவேண்டும்) | ரூ.2,000/– |
| 3. | திருப்புவனம் பேரூராட்சிப் பகுதியில் குடிநீர்த்திட்டப் பணிகளுக்கான உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் (பொருட்களின் விலை தனித்தனியே குறிப்பிடப்படவேண்டும்) | ரூ.2,000/– |
| 4. | திருப்புவனம் பேரூராட்சி பொது சுகாதார பணிக்கு பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள், பினாயில், கொசுமருந்துகள் மற்றும் EM சொலுசன் சப்ளை செய்தல் (தனித்தனியாக விலை குறிப்பிடவேண்டும்) | ரூ.5,000/– |
| 5. | திருப்புவனம் பேரூராட்சிக்குத் தேவையான அனைத்து வகை தெருமின் விளக்குகள் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் (தனித்தனியாக விலை குறிப்பிடவேண்டும்) | ரூ.5,000/– |
| 6. | திருப்புவனம் பேரூராட்சிக்குத் தேவையான பொது சுகாதார தளவாட சாமான்கள் சப்ளை செய்தல் (தனித்தனியாக விலை குறிப்பிடவேண்டும்) | ரூ.5,000/– |
| 7. | திருப்புவனம் பேரூராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஜே.சி.பி இயந்திரம் மற்றும் டோசர் இயந்திரம் பயன்படுத்திட வாடகை (1 மணி நேரத்திற்கு என குறிப்பிடவேண்டும்) | ரூ.1,000/– |
| 8. | திருப்புவனம் பேரூராட்சியில் வைக்கப்பட்டுள்ள பழைய பயன்பாடற்ற தெருவிளக்கு உதிரி பாகங்கள் பழைய பயன்பாடற்ற பைப்பு சாமான்கள் மற்றும் பழைய பயன்பாடற்ற பொது சுகாதார தளவாடச் சாமான்கள் எடுத்துக்கொள்ளுதல் (தனித் தனியே கிலோ 1–க்கு விலை குறிப்பிடப்படவேண்டும்) | ரூ.1,000/– |

- மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு திருப்புவனம் பேரூராட்சியின் அப்போதைய செயல் அலுவலரால் (திருமதி. வி. சந்திரகலா) வெளியிடப்பட்டு, அதன் நகல் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்/தனி அலுவலர், சிவகங்கை மண்டலத்திற்கு நகலிடப்பட்டுள்ளதும் தெளிவாகிறது. மேலும் மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பில் திருப்புவனம் பேரூராட்சியில் புதிதாக சோலார் விளக்குகள் அமைப்பது குறித்து அறிவிப்பு ஏதும் இடம்பெறவில்லை. ஆயினும், திருப்புவனம் பேரூராட்சிக்குத் தேவையான அனைத்து வகை தெருமின் விளக்குகள் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.
- திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு **19.3.2020** நாளிட்ட தினமணி நாளிதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளதில் திரு. இரா. ராஜா, தனி அலுவலர், திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி மற்றும் திருப்புவனம் பேரூராட்சியின் அப்போதைய செயல் அலுவலர் திருமதி. வி. சந்திரகலா ஆகியோரது பெயர் இடம்பெற்றுள்ளதும் மேற்கண்ட ஒப்பந்த அறிவிப்பு நகலின் மூலம் அறியப்படுகிறது.
- திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி மன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள் – பொருள் **9** நாள் **15.4.2020**ல் திருப்புவனம் பேரூராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பிற்குத் தேவையான உபகரணங்களை **2020–2021**ம் ஆண்டிற்கு சப்ளை செய்வதற்கு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விதிமுறைகள் **2000**–ன்படி ஒப்பந்தப்புள்ளி **27.3.2020** அன்று நடத்தப்பட்டதில் **(1)** ராஜலெட்சுமி ஏஜென்சீஸ், மதுரை மற்றும் **(2)** மோகனப்பிரியா டிரேடர்ஸ், மதுரை ஆகிய இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ராஜலெட்சுமி ஏஜென்சீஸ், மதுரை அங்கீகரிக்கப்படுவதாக தீர்மானம் எண்.**246** பேரூராட்சி தனி அலுவலரால் ஒப்பளிக்கப்பட்டுள்ளதும் ஆவணங்களின் மூலம் தெளிவாகிறது.

- ராஜலட்சுமி ஏஜென்சீஸ், மதுரை என்ற நிறுவனம் **2 x 30 W** ஆல் இன் ஒன் சோலார் தெருவிளக்கு பிட்டிங் **5** மீட்டர் மின்கம்பத்துடன் (All in one Solar street Light with 5 meter pole) **1**–க்கு **1,38,000/–** (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தெட்டாயிரம் மட்டும்) விலை விகிதம் குறிப்பிட்டும், மோகனப்பிரியா டிரேடர்ஸ், மதுரை என்ற நிறுவனம் ரூ.**1,42,000/–** (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்திரெண்டாயிரம் மட்டும்) விலை குறிப்பிட்டும் அளித்த நிலையில், குறைந்த விலைப்புள்ளி குறிப்பிட்ட ராஜலட்சுமி ஏஜென்சீஸ், மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு தீர்மானம் பேரூராட்சி தனி அலுவலரால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- இந்நிலையில், அப்போதைய கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சிக்குட்பட்ட **50** இடங்களில் சூரிய ஒளி மின்விளக்குகள் (Solar Light) அமைத்துத்தர பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அளிக்கப்பட்ட **25.8.2020** நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில், மேற்கண்ட பணிகளை பேரூராட்சியின் பொது

நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு 21.9.2020ல் தீர்மானம் வைக்கப்பட்டு, “பேரூராட்சியின் நிதியிருப்பு திருப்திகரமாக உள்ளது என்றும், எனவே, பொது மக்கள் நலன் கருதி மேற்படி பணியினை வருடாந்திர ஒப்பந்த நிறுவனமான ராஜலெட்சுமி ஏஜென்சீஸ், மதுரை நிறுவனத்தின் மூலம் செயல்படுத்திடலாம்” என்று செயல் அலுவலரால் குறிப்புரை சமர்ப்பிக்கப்பட்டு, தீர்மானம் எண்.301–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது அறியப்படுகிறது.

- மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில், 2020–2021ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட ராஜலெட்சுமி ஏஜென்சி, மதுரை நிறுவனத்திற்கு 10 இடங்களில் சோலார் விளக்குகள் அமைப்பதற்கு பணி ஆணை, திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சியின் அப்போதைய செயல் அலுவலர் திருமதி. வி. சந்திரகலா என்பவரது செயல் முறை ஆணை எண்.363/2020/அ2 நாள் 27.10.2020ன் மூலம் வழங்கப்பட்டு, 30 நாட்களுக்குள் பணியினை செய்து முடிக்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்டு, ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- இதன் அடிப்படையில் ராஜலட்சுமி ஏஜென்சீஸ், மதுரை என்ற நிறுவனத்தினால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திருப்புவனம் பேரூராட்சிக்குட்பட்ட 50 இடங்களில் சூரிய ஒளி மின்விளக்குகள் அமைக்கப்பட்டு, ஒரு விளக்கு அமைத்திட அந்நிறுவனத்தினால் குறித்துரைக்கப்பட்ட ரூ.1,38,000/– வீதம் 50 விளக்குகளுக்கு ரூ.69,00,000/– (ரூபாய் அறுபத்தொன்பது லட்சம் மட்டும்) பட்டியல் எண்.74/2.11.2020, 76/09.11.2020 மற்றும் 78/16.11.2020 மூலம் பெறப்பட்ட தொகை பகுதிபகுதியாக முடிக்கப்பட்ட எண்ணிக்கையிலான பணிகளுக்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சிவகங்கை மாவட்டம் அவர்களது செயல்முறை ஆணை எண்.மூ.மு.2834/2020/டி1 நாள் 20.11.2020 (20 எண்ணம் சூரியஒளி மின் விளக்குகள்), 2997/2020/டி1 நாள் 30.11.2020 (10 எண்ணம் விளக்குகள்), மற்றும் மூ.மு.3328/2020/டி1 நாள் 28.12.2020 (20 எண்ணம் விளக்குகள்) ஒப்பளிப்பு செய்து பட்டியல் தொகை வழங்க அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு பட்டியல் தொகையிலிருந்தும் 2 சதவீத வருமான வரி பிடித்தம் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டு, வங்கி மூலமாக பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான ராஜலட்சுமி ஏஜென்சீஸ், மதுரை சூரிய ஒளி மின் விளக்குகளுக்கு 2 ஆண்டுகளுக்கு முழு உத்தரவாதமும் மற்றும் 5 ஆண்டுகளுக்கு இலவச சேவையும் செய்து தருவதாக உத்தரவாதம் அளித்துள்ளதாக திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையில் தெளிவாக்கப்பட்டுள்ளது

- திருப்புவனம் பேரூராட்சியில் சூரிய ஒளி மின் விளக்குகள் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, பணிகளும் 2020லேயே முடிக்கப்பட்டு, பொருத்தப்பட்ட

50 சோலார் மின் விளக்குகளுக்கான பட்டியல் தொகை ரூ.69,00,000/– (ரூபாய் அறுபத்தொன்பது லட்சம் மட்டும்) ராஜலெட்சுமி ஏஜென்சி, மதுரை என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுவிட்டதும் ஆவணங்களின்படி தெளிவாக அறிப்படுகின்றபோதிலும், மனுதாரரால் 2.5.2022ல் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் திருப்புவனம் பேரூராட்சியில் எந்தவொரு சட்ட விதிகளையும் முறையாக பின்பற்றாமலும், டெண்டர் அறிவிப்பு எதுவும் இல்லாமலும் தன்னிச்சையாக SRS என்ற தனியார் நிறுவனத்திற்கு டெண்டர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், இதனால் அரசுக்கு அதிக நிதி இழப்பும் ஏற்பட்டுள்ளது என்று புகார் அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

➢ பேரூராட்சிகளின் இயக்கக சுற்றறிக்கை எண்.1/2008//2 நாள் 25.1.2008ன்படி பேரூராட்சிக்கு தேவையான தெருவிளக்கு உதிரி பாகங்கள் தயாரிப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மூலம் இந்திய தரச் சான்று அளிக்கப்பட்ட (ISI) பொருட்கள் மட்டுமே உரிய முறையில் கொள்முதல் செய்யப்படவேண்டும்

➢ குறிப்பாக கிராம்டன் கிரீவ்ஸ் (Crompton Greaves), பிலிப்ஸ் (Philips)/பஜாஜ் (Bajaj) போன்ற நிறுவனங்கள் தயாரிக்கும் தெருவிளக்கு உபகரணங்களை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998–ன்படி கொள்முதல் செய்யப்படலாம் என்றும், கொள்முதல் மதிப்பு ரூ.25.00 லட்சத்திற்குள் இருந்தால் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி நாளிதழிலும், ரூ.25.00 லட்சத்திற்கு மேல் இருந்தால் மாநில ஒப்பந்தப்புள்ளி நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்யலாம்

➢ தெருவிளக்கு உதிரிகளுக்கு ஆண்டு ஒப்பந்தம் இறுதி செய்யும்போது விலை விகிதங்கள் வெளிச்சந்தை விலை (prevailing Market Rate) மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய விலைப்பட்டியலுடன் ஒப்பிட்டு மொத்த சில்லரை விலைக்கு (Maximum Retail Price) மிகாமல் இருக்கவேண்டும். மற்றும் அந்த மாவட்டத்திலுள்ள பிற பேரூராட்சிகளில் கொள்முதல் செய்யப்படும் விலைவிகிதங்கள் சீரான விலை விகிதத்தில் கொண்டிருத்தல் வேண்டும் (Uniform Price)

➢ மேலும், அரசாணை எண்.149 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.7.1998ன்படி பேரூராட்சிகளுக்கு தேவைப்படும் தெருவிளக்கு சாதனங்களை ஐஎஸ்ஓ (ISO) 9000 தரச்சான்று பெற்றதாக இருக்க வேண்டும்

➢ அரசாணை (ப) எண்.166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 12.4.2008ன்படி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர் மற்றும் அரசு துறை அதிகாரிகள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோரைக்கொண்டு அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், நிர்வாக

அனுமதி வழங்கும் அதிகார உச்சவரம்பு கீழ்க்கண்டுள்ளவாறு ஆணையிடப்பட்டுள்ளது

| | சிறப்புநிலை/தேர்வுநிலை (ரூபாய் இலட்சத்தில்) | நிலை I மற்றும் நிலை II (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பேரூராட்சி மன்றம் | 8.00 | 4.00 |
| உதவி இயக்குநர் | 20.00 | 20.00 |
| மாவட்ட ஆட்சியர் | 30.00 | 30.00 |
| பேரூராட்சிகளின் இயக்குநர் | 300.00 | 300.00 |
| அரசு | 300 க்கு மேல் | 300க்கு மேல் |

➢ அரசாணை (நிலை) எண்.108 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, நாள் 28.5.1999 மற்றும் அ.ஆ.(நிலை) எண்.307 நிதி (சம்பளங்கள்) துறை, நாள் 1.11.2011ன்படி ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை நாளிதழ்களில் வெளியிடும்போது பின்பற்றவேண்டிய நடைமுறைகள் பின்வருமாறு வகுத்துரைக்கப்பட்டுள்ளன:-

| விளம்பரங்கள் வெளியிடும் நாளிதழ்களின் எண்ணிக்கை மற்றும் பதிப்பு | பணிகளின் மதிப்பு | வாங்கும் பொருட்கள்/ கருவிகளின் மதிப்பு |
|---|---|---|
| மாவட்ட அளவிலான விளம்பரம்<br>இரண்டு தமிழ் நாளிதழ்கள்<br>(மாவட்ட அளவில் மட்டும்) | ரூ.10 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.25 இலட்சத்திற்குள் | ரூ.5 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.10 இலட்சத்திற்குள் |
| மாநில அளவிலான விளம்பரம்<br>ஒரு ஆங்கில நாளிதழ்<br>ஒரு தமிழ் நாளிதழ்<br>(அனைத்துப் பதிப்புகள்)<br>(தமிழ் நாட்டில்) | ரூ.25 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.1 கோடிக்குள் | ரூ.10 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.25 இலட்சத்திற்குள் |
| ஒரு ஆங்கில நாளிதழ்<br>(தென்னக பதிப்பு)<br>ஒரு தமிழ் நாளிதழ்<br>(அனைத்து பதிப்புகள்)<br>(தமிழ் நாட்டில்) | ரூ.1 கோடிக்கு மேல்<br>ரூ.5 கோடிக்குள் | ரூ.25 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.1 கோடிக்குள் |
| ஒரு ஆங்கில நாளிதழ்<br>(அனைத்து பதிப்பு)<br>ஒரு தமிழ் நாளிதழ்<br>(அனைத்து பதிப்புகள்)<br>(தமிழ் நாட்டில்) | ரூ.5 கோடிக்கு மேல் | ரூ.1 கோடிக்கு மேல் |

- மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி, திருப்புவனம் பேரூராட்சி 2020–2021ஆம் ஆண்டில் ரூ.69 இலட்சத்திற்கு சூரிய ஒளி மின்விளக்குகளை கொள்முதல் செய்துள்ள நிலையில், அதன் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் ஒரு ஆங்கில நாளிதழ் (தென்னக பதிப்பு) மற்றும் ஒரு தமிழ் நாளிதழ் (அனைத்து பதிப்புகள்) (தமிழ் நாட்டில்) பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், முறையான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோராமலும், பேரூராட்சி ஆணையரது நிர்வாக அனுமதி பெறாமலும், ஒப்பந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளான 19.3.2020 அன்று சூரிய ஒளி மின்விளக்குகள் அமைத்துத்தருமாறு பேரூராட்சியினால் கோரிக்கை ஏதும் பெறப்படாத நிலையில், ஒப்பந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு இறுதி செய்யப்பட்ட பின்னரே, அதாவது 8/2020ல் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் அளித்த பரிந்துரை கடிதத்தின் அடிப்படையில், திருப்புவனம் பேரூராட்சிக்குட்பட்ட 50 இடங்களில் சூரிய ஒளி மின் விளக்குகள் அமைக்கப்பட்டு, எந்தவொரு விதிமுறைகளையும் பின்பற்றாமல் ரூ.69.00 இலட்சம் மேற்கண்ட பணிக்காக ராஜலெட்சுமி ஏஜென்சி, மதுரை என்ற நிறுவனத்திற்கு ஒப்பளிப்பு செய்து, முழுத் தொகையும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது ஆவணங்களின்படி தெள்ளத் தெளிவாக தெரிகிறது.
- சூரிய ஒளி மின் விளக்குகள் அமைக்கும் பணிக்கு ராஜலட்சுமி ஏஜென்சீஸ், மதுரை என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்ட பின்னரும், மனுதாரர் SRS என்ற தனியார் நிறுவனத்திற்கு டெண்டர் ஒதுக்கப்பட்டுள்ளதாக புகார் அளித்துள்ளதால், ஒப்பந்தத்தை நிறைவேற்றிய நிறுவனத்தின் பெயரைக்கூட சரியாக குறிப்பிடாமல் அவசர கதியிலும், தம்மால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை தள்ளுபடி செய்யப்பட்டுவிட்ட நிலையில், முறையான தகவல்களைக்கூட சேகரிக்காமலும், தமது புகார் குறித்து முழுமையான ஆதாரங்களையும் சரியாக முன்வைக்காமல் அவசர கதியில் தமது கோரிக்கை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மனுதாரர் புகார் அளித்துள்ளார் என்பதும் தெளிவாக தெரிகிறது.

- மேலும் தனது புகார் குறித்து திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்த தவறான தகவலின் அடிப்படையில் தம்மால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், அவ்வழக்கினை Recall செய்திடக்கோரி தான் மீண்டும் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதென்றும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

- இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையின்போது மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களிலிருந்து அவர் மேற்கண்ட புகார் குறித்து பேரூராட்சிகளின் இயக்குநருக்கு தம்மால் அளிக்கப்பட்ட 27.11.2020 நாளிட்ட புகார் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சிவகங்கை மாவட்டத்திற்கு 21.12.2020ல் அனுப்பிவைக்கப்பட்டதென்றும், ஆனால் இதுவரை தனது புகார் மனு குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், எனவே தமது 27.11.2020 நாளிட்ட தமது புகார் மனு மீது நடவடிக்கை

எடுக்கக்கோரி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சிவகங்கை அவர்களுக்கு அறிவுறுத்தி ஆணையிடக்கோரி புதிய நீதிப்பேராணை ஒன்றை மனுதாரர் தாக்கல் செய்ய உத்தேசித்துள்ளதும், ஆயினும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி வழக்கு இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை என்பதும், நீதிமன்ற வழக்கு குறித்து பேரூராட்சிக்கு எவ்வித தாக்கீதும் இதுவரை நீதிமன்றம் மூலமாக பெறப்படவில்லை என்று திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலத்தின்படியும் தெளிவாகிறது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சியில் 2020–2021ஆம் ஆண்டில் வருடாந்திர ஒப்பந்தம் கோரப்பட்டு, ஒப்பந்த விதிமுறைகள், நிர்வாக அனுமதி நடைமுறைகள் எதனையும் பின்பற்றாமல் விதிகளுக்குப் புறம்பாக, பேரூராட்சிக்குட்பட்ட 50 இடங்களில் சூரிய ஒளி மின் விளக்குகள் (2 x 30 w all in one Solar Street Light with 5 Meter Pole) அமைக்க ஒரு விளக்கு அமைத்திட ரூ.1,38,000/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தெட்டாயிரம் மட்டும்) வீதம் 50 எண்ணிக்கையிலான மின் விளக்குகளை ராஜலெட்சுமி ஏஜென்சீஸ், மதுரை என்ற நிறுவனத்திற்கு அளித்து, மொத்தம் ரூ.69.00 லட்சம் (ரூபாய் அறுபத்தொன்பது லட்சம் மட்டும்) மேற்கண்ட பணிக்கான காசோலை பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இம்முறைகேடான செயலுக்குக் காரணமான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் செயல் அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஆகியோர் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, மிகக் கடுமையான தண்டனையை வழங்கிடுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், எந்தவிதமான நடைமுறைகளையும் பின்பற்றாமல், மனுதாரரால் தொடுக்கப்பட்ட நீதிப்பேராணை தொடர்பாக தவறான தகவல்களை நீதிமன்றத்திற்கு அளித்ததன் காரணமான நீதிப்பேராணை ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளதால், திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் உயர் அதிகாரிகளுக்கு தகவல் வழங்காமலும், உயர் அலுவலர்களது குறிப்புரையைப் பெறாமலும் தன்னிச்சையாக செயல்பட்டுள்ள அவரது செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. பேரூராட்சி நிர்வாகத்தில் இதுபோன்ற தவறான முன்னுதாரனங்கள் இனிவரும் காலங்களில் நிகழாதிருக்க ஒட்டுமொத்த பேரூராட்சி அலுவலர்களுக்கும்/பேரூராட்சி உதவி இயக்குநர்களுக்கும் உரிய அறிவுறுத்தங்களை வழங்கிடுமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளரை இம்முறைமன்ற நடுவம் வலியுறுத்துகிறது.

மேலும், பேரூராட்சி நிர்வாகத்தில் வருடாந்திர ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த விவரங்கள், அதற்கான உச்ச வரம்பு, கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் குறித்த விவரங்கள் அவற்றின் தரம், அவற்றிற்கான வருடாந்திர உச்ச வரம்பு நிதி எவ்வளவு என்பன போன்ற விவரங்கள் குறித்த ஒட்டுமொத்த விவரங்களுடனான அறிவுறுத்தங்களை (Consolidated Instructions with all details and monetory limit) அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கு அனுப்பிடவும், இதுகுறித்த விவரங்களை

பேரூராட்சி நிர்வாகத் துறையின் வலைதளத்தில் பொதுமக்கள் அறிந்திடும்வண்ணம் அவற்றை பதிவேற்றம் செய்திடுமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

அதேவேளையில், பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான நெறிமுறைகள் மற்றும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் ஆகியவற்றை அனைத்து பேரூராட்சிகளும் முறையாக கடைபிடிக்கும் வகையில், தொகுக்கப்பட்ட அறிவுறுத்தங்களை அனைத்து பேரூராட்சிகள் மற்றும் உதவி இயக்குநர்களுக்கும் பிறப்பிக்குமாறு பேரூராட்சிகளின் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 23 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. N.S.V.P.V. நடராஜன்,
தலைவர், நகர் காங்கிரஸ் கமிட்டி, முன்னாள் துணைத் தலைவர்,
திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்–630 611
செயல் அலுவலர்,
திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சி, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்–630 611
பேரூராட்சிகளின் உதவி உதவி இயக்குநர், சிவகங்கை மண்டலம், சிவகங்கை
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம், சிவகங்கை.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நந்தனம், சென்னை–35

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

28/6/22

செயலர்
28.6.22

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032